# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

## TNPSC GROUP I, II, IIA, IV - 2024

**TEST BATCH GROUP II, IIA - GS Revision 1**

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

1) தவறான இணை எது?

A. வாழ்க்கை (ம) தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதுகாப்பு பெறும் உரிமை - விதி 21.

B. சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை - விதி 26.

C. சட்டத்தின் முன் அனைவரும் சமம் - விதி 14.

D. சிறுபான்மையினரின் எழுத்து, மொழி (ம) கலாச்சார பாதுகாப்பு - விதி 30.

E. விடை தெரியவில்லை

2) அன்னிபெசன்ட் குறித்த கூற்றுகளில் எது சரியானது?

1. 1875, நியூயார்க்கில் தியோசோபிகல் சொசைட்டியை நிறுவினார்.

2. 1907 முதல் 1933 வரை அன்னிபெசன்ட் தியோசோபிகல் சொசைட்டியின் தலைவராக செயல்பட்டார்.

3. 1917, கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை தாங்கிய முதல் பெண் தலைவர் ஆவார்.

A. 1, 2 B. 2, 3 C. 1 மட்டும் D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

3) கீழ்க்கண்டவற்றுள் எந்த குறியீட்டை $UNDP$ வெளியிடுவது இல்லை?

A. மனித வளர்ச்சிக் குறியீடு (HDI) B. பலபரிமாண வறுமை குறியீடு (MPI)

C. பாலின சமத்துவமின்னை குறியீடு (GII) D. சுற்றுச்சூழல் தரக் குறியீடு (EQI)

E. விடை தெரியவில்லை

4) சிறப்பு பொருளாதார மண்டலங்களை அதிக எண்ணிக்கையில் கொண்டுள்ள மாநிலம் எது?

A. தெலுங்கானா B. தமிழ்நாடு C. கேரளா D. கர்நாடகா E. விடை தெரியவில்லை

5) கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை காலவரிசைப்படுத்துக.

1. முதல் வட்டமேசை மாநாடு.

2. சட்ட மறுப்பு இயக்கம்.

3. ஜாலியன் வாலாபாக் படுகொலை.

4. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டம்.

A. 3-4-1-2 B. 4-3-1-2 C. 3-4-2-1 D. 4-3-2-1 E. விடை தெரியவில்லை

6) நாதுலாய் கணவாய் அமைந்துள்ள மாநிலம் எது?

A. அருணாச்சல பிரதேசம் B. இமாச்சல பிரதேசம் C. ஜம்மு & காஷ்மீர்

D. சிக்கிம் E. விடை தெரியவில்லை

7) கீழ்க்கண்டவற்றுள் எந்த மாநிலம் அதிக $ST$ மக்கள்தொகையைக் கொண்டது?

A. கேரளா B. தமிழ்நாடு C. இராஜஸ்தான் D. மிசோரம் E. விடை தெரியவில்லை

8) தவறான கூற்றினை தேர்வு செய்க.

1. குடியரசுத் தலைவர் அரசாங்கத்தின் தலைவராவார்.

2. விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை குடியரசு தலைவர் தேர்தலுடன் தொடர்புடையது.

3. 1951, ஜூன் 20-ல் கேரளாவில் முதல் முறையாக குடியரசு தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

9) கீழ்க்கண்டவற்றுள் எது தவறாக பொருந்தியுள்ளது?

A. கோதாவரி - பூர்ணா.

B. கிருஷ்ணா - பெடவாகு.

C. மகாநதி - கொய்னா.

D. நர்மதை - ஹெரன்.

E. விடை தெரியவில்லை

10) இந்தியாவில் குறைந்த பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாநிலம் எது?

A. பஞ்சாப் B. ஹரியானா C. மத்தியபிரதேசம் D. மிசோரம்

E. விடை தெரியவில்லை

11) தவறான இணை எது?

A. மூக் நாயக் - அம்பேத்கர்.

B. ஹிந்த் சுவராஜ் - மகாத்மா காந்தி.

C. நெருப்பின் இறக்கைகள் - மௌலானா அபுல்கலாம் ஆசாத்.

D. உலக வரலாற்றின் பார்வைகள் - ஜவஹர்லால் நேரு.

E. விடை தெரியவில்லை

12) சோடியம் குளோரைடு எதன் தயாரிப்பு?

A. வலிமையான அமிலம் (ம) வலிமையான காரம்.

B. வலிமையான அமிலம் (ம) வலிமையற்ற காரம்.

C. வலிமையான காரம் (ம) வலிமையற்ற அமிலம்.

D. வலிமையற்ற காரம் (ம) வலிமையற்ற அமிலம்.

E. விடை தெரியவில்லை

13) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

1. சல்பியூரிக் அமிலம் வேதிப்பொருட்களின் அரசன் என்று அழைக்கப்படுகிறது.
2. கார்பானிக் அமிலமானது ரொட்டி சோடாவின் ஒரு பகுதிப் பொருள்.
3. அம்மோனிம் ஹைட்ராக்சைடு சோப்பு தயாரிக்க பயன்படுகிறது.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 3 மட்டும் D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

14) கீழ்க்கண்டவற்றுள் எவை ஈ.வெ.ரா. பெரியார் குறித்த கூற்றுகளில் சரியானது?

1. ஈரோடு முனிசிபல் கவுன்சில் தலைவராக இருந்தார்.
2. இவர் "நவீன தமிழகத்தின் தந்தை" என்று அறியப்படுகிறார்.
3. 1944-ல் நீதிக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

15) எத்தனை பஞ்சாயத்து அமைப்புகளின் பணிகள் 73-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A. 27 பணிகள் B. 28 பணிகள் C. 29 பணிகள் D. 30 பணிகள்

E. விடை தெரியவில்லை

16) தமிழ்நாட்டில் இராஜாஜி உப்பு சத்தியாகிரகத்தை என்று தொடங்கினார்?

A. மார்ச் 2, 1930 B. ஏப்ரல் 13, 1930 C. ஆகஸ்ட் 3, 1930 D. செப்டம்பர் 9, 1930

E. விடை தெரியவில்லை

17) உள்ளாட்சி அரசங்கத்தில் *SC & ST* -களுக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் ஒதுக்கீடு வேண்டும் என எந்தக்குழு பரிந்துரை செய்தது?

A. பல்வந்த்ராய் மேத்தா குழு B. சந்தானம் குழு C. அசோக்மேத்தா குழு

D. தார் குழு E. விடை தெரியவில்லை

18) 'லோக் பால்' எனும் கூற்றை முதன்முதலில் உருவாக்கியவர் யார்?

A. லெஷ்மி மால் சிங்வி B. மகாத்மா காந்தி C. ஜவஹர்லால் நேரு D. பைலி

E. விடை தெரியவில்லை

19) கீழ்க்கண்டவற்றுள் 21-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம். 1967ன் மூலமாக எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட மொழி எது?

A. போடோ B. நேபாளி C. கொங்கனி D. சிந்தி E. விடை தெரியவில்லை

20) கீழ்க்கண்டவற்றுள், எவர் இந்திய நிதி ஆணையத்தின் தலைவராக இருந்ததில்லை?

A. பிரணாப் முகர்ஜி B. மஹாவீர் தியாகி C. சி.ரங்கராஜன் D. பிரம்மானந் ரெட்டி
E. விடை தெரியவில்லை

21) எவ்வகை மசோதா இந்திய பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் தனித்தனியே சிறப்பு பெரும்பான்மையில் நிறைவேற்றப்பட வேண்டும்?

A. சாதாரண மசோதா B. பண மசோதா C. நிதி மசோதா
D. அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதா E. விடை தெரியவில்லை

22) வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் இலக்கை அடையாத ஐந்தாண்டுத் திட்டங்கள்

1. முதல் ஐந்தாண்டுத் திட்டம் 2. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்
3. நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

23) எந்த சரத்து மாநிலத்தில் தனியாக பழங்குடியினருக்கு அமைச்சரை நியமிக்க வழிவகை செய்கிறது?

A. விதி 46 B. விதி 319 C. விதி 164(1) D. விதி 349 E. விடை தெரியவில்லை

24) உயிருள்ள (ம) உயிரற்றவைகளின் பண்புகளை பெற்றவை

A. புரோட்டோசோவா B. வைரஸ் C. பாக்டீரியா D. பூஞ்சை
E. விடை தெரியவில்லை

25) சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. மின்தடை எண்ணின் தலைகீழி மின்கடத்து எண் எனப்படும்.
2. மின்தடை எண்ணின் அலகு ஓம்மீட்டர் ஆகும்.
3. ஒரு குதிரைதிறன் என்பது 746 வாட் ஆகும்.

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

26) சரியான இணை எது?

1. டெட்டனஸ் - பாக்டீரியா நோய்.
2. டிப்தீரியா - வைரஸ் நோய்.
3. படர் தாமரை - பூஞ்சை நோய்.
4. காலா அசார் - புரோட்டோசோவா நோய்.

A. 1, 2 B. 1, 3 C. 1, 3, 4 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

27) ஒரு லென்சின் திறன் $-4D$ எனில் அதன் குவியத்தொலைவு

A. $4m$ B. $-40m$ C. $-0.25m$ D. $-2.5m$ E. விடை தெரியவில்லை

28) $GST$ கவுன்சில் எப்போது உருவாக்கப்பட்டது?

A. செப்டம்பர் 15, 2016 B. ஜுலை 15, 2016 C. ஜுலை 01, 2017
D. ஜுலை 15, 2017 E. விடை தெரியவில்லை

29) சரியான இணை எது?

1. பிரதான் மந்திரி முத்ரா யோஜனா - 2015.
2. பிரதான் மந்திரி கவுஷல் விகாஷ் யோஜனா - 2008.
3. பிரதான் மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் - 2015.

A. 1 மட்டும் B. 1, 2 C. 2, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

30) எந்த ஆண்டு ரிசர்வ் வங்கி (RBI) தேசியமயமாக்கப்பட்டது?

A. 1934 B. 1935 C. 1949 D. 1955 E. விடை தெரியவில்லை

31) தவறான இணை எது?

1. வாயு விதி - ராபர்ட் பாய்ஸ்
2. இயக்க விதி - நியூட்டன்
3. மின்காந்த தூண்டல் - பாரடே

A. 1, 2 B. 1 மட்டும் C. 1, 3 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

32) கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.

1. மெட்ராஸ் பிராமணரல்லாதோர் சங்கம்.
2. மெட்ராஸ் திராவிட சங்கம்.
3. ஆதிதிராவிட மகாஜன சங்கம்.

A. 1-2-3 B. 2-1-3 C. 3-1-2 D. 3-2-1 E. விடை தெரியவில்லை

33) பொருத்துக.

a. எம்.சி.ராஜா - 1. தொழிலாளர் பத்திரிக்கை
b. எம்.சிங்காரவேலர் - 2. அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம்
c. பி.ரங்கையா - 3. மெட்ராஸ் மகாஜன சபை
d. அயோத்தி தாசர் - 4. அத்வைதானந்தா சபை

A. 4 1 3 2 B. 2 1 3 4 C. 4 1 2 3 D. 2 1 4 3 E. விடை தெரியவில்லை

34) அனுமதியின்றி எத்தனை நாட்கள் பாராளுமன்றத்திற்கு வராத நிலையில் ஒரு பாராளுமன்ற (MP) உறுப்பினரைத் தகுதி நீக்கம் செய்யப்படலாம்?

A. 30 நாட்கள் B. 60 நாட்கள் C. 90 நாட்கள் D. 120 நாட்கள்
E. விடை தெரியவில்லை

35) சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. மொகஞ்சதாரோ நாகரீகம் ஹரப்பாவை விட பழமையானது.
2. 1922ல் $R.D.$பானர்ஜி என்பவரால் மொகஞ்சதாரோ கண்டுபிடிக்கப்பட்டது.

A. 1 சரி, 2 தவறு B. 1 தவறு, 2 சரி C. இரண்டும் சரி D. இரண்டும் தவறு
E. விடை தெரியவில்லை

36) "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி" - எனும் திருக்குறளில் தந்தை மகனுக்குச் செய்யும் கடனாக குறிப்பிடப்படுவது?

A. பொருள் சேர்த்து வைத்தல் B. வீரனாக உருவாக்குதல்
C. கற்றவர் சபையில் முந்தி இருக்கச் செய்தல் D. தானம் செய்தல்
E. விடை தெரியவில்லை

37) 'வெ.ஃ.காமை' என்ற அதிகாரத் தலைப்பின் பொருள்

A. வெட்கம் கொள்ளாமை B. பிறரை இகழாமை C. பிறரிடம் இரந்து வாழாமை
D. பிறர்மேல் ஆசைகொள்ளமை E. விடை தெரியவில்லை

38) திருப்புறம்பியம் போரில் நேரடியாக பங்கு கொண்ட சோழ மன்னன்

A. விஜயாலய சோழன் B. ஆதித்ய சோழன் C. பராந்தக சோழன்
D. இராஜேந்திர சோழன் E. விடை தெரியவில்லை

39) இந்து சமய அறநிலையச் சட்டம் முதன் முதலில் எந்த கட்சியின் ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்டது?

A. நீதிக்கட்சி B. காங்கிரஸ் கட்சி C. திராவிட முன்னேற்றக் கழகம்

D. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் E. விடை தெரியவில்லை

40) “மக்கள் கல்வி கற்ற அளவிற்கு அறிவு ஊறும்” இப்பொருளுக்கு திருவள்ளுவர் கூறும் உவமை எது?

A. வெள்ளத் தனைய மலர்நீட்டம் B. தொட்டனைத் தூறும் மணற்கேணி

C. வற்றல் மரம் தளிர்த் தற்று D. இழுக்கல் உடையழி ஊற்றுக்கோல்

E. விடை தெரியவில்லை

41) வட்டப் பாதையில் சைக்கிளில் செல்லும் ஒருவர் வட்ட மையத்தை நோக்கி உட்பக்கமாக சாய்வது எதனால்?

A. தேவையான மையநோக்கு விசையை உருவாக்க.

B. புவியீர்ப்பு விசையை சமன் செய்ய.

C. புவியீர்ப்பு விசையும், உராய்வு விசையும் சமமாவதால்.

D. பக்கவாட்டு அழுத்தத்தை சரி செய்ய.

E. விடை தெரியவில்லை

42) நானா சாகேப் ஆங்கிலேயர்களுக்கு எதிராக மன வெறுப்பை வளர்த்துக் கொண்டது ஏன்?

A. வாரிசு இல்லை B. சிறந்த நிர்வாகியல்ல C. ஓய்வூதியம் மறுக்கப்பட்டது

D. துரோகி E. விடை தெரியவில்லை

43) தற்போது, தமிழகத்தில் உள்ள மொத்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை எத்தனை?

A. 24 B. 25 C. 28 D. 29 E. விடை தெரியவில்லை

44) பின்வருவனவற்றுள் தவறான தொடர் எது?

A. புவியின் உட்பகுதியில் நிலநடுக்கம் தோன்றுமிடத்தை நிலநடுக்க மையம் என்கிறோம்.

B. நிலநடுக்கத்தால் ஏற்படும் பாதிப்பானது மையத்திற்கு அருகில்தான் மிகவும் அதிகம்.

C. நிலநடுக்க மையத்திற்குச் செங்குத்தாக புவியின் மேற்பரப்பில் காணப்படும் இடத்திற்கு மையப்புள்ளி என்று பெயர்.

D. நிலநடுக்கம் சீஸ்மோகிராப் என்ற கருவியால் பதிவு செய்யப்படுகிறது.

E. விடை தெரியவில்லை

45) பொருத்துக.

a. ஐசோதெர்ம் - 1. சம சூரிய வெளிச்சக் கோடு

b. ஐசோகெல் - 2. சமவெப்பக் கோடு

c. ஐசோபார் - 3. சம மழையளவுக் கோடு

d. ஐசோ ஹைட்ஸ் - 4. சம காற்றழுத்தக் கோடு

A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 3 4 2 1 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

46) இந்தியாவுட் எல்லையை பகிர்ந்து கொள்ளும் மிகச்சிறிய நாடு?

A. நேபாளம் B. ஆப்கானிஸ்தான் C. பூடான் D. வங்காளதேசம்

E. விடை தெரியவில்லை

47) பொருத்துக.

a. சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதல் - 1. எம்.என்.ராய்

b. கான்பூர் சதி வழக்கு - 2. பெஞ்சமின் ப்ராட்லி

c. லாகூர் சதி வழக்கு - 3. கல்பனா தத்

d. மீரட் சதி வழக்கு - 4. பகத் சிங்

A. 4 3 2 1 B. 3 1 4 2 C. 2 4 3 1 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

48) கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியாகப் பொருந்தவில்லை?

A. ***P.C.***மகலநோபிஸ் - 3வது ஐந்தாண்டுத் திட்டம்.

B. மறைமுக வேலையின்மை - இறுதிநிலை உற்பத்தி திறன் பூஜ்யம்.

C. ***J.M.*** கீன்ஸ் - புதிய பொருளியலின் தந்தை.

D. முதல் திட்டக்குழு தலைவர் - ஜவஹர்லால் நேரு.

E. விடை தெரியவில்லை

49) தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ள நதிநீர்ப் பிரச்சனை தீர்ப்பாயம் (ம) நதிகளின் இணையைக் கண்டுபிடி.

1. கிருஷ்ணா நீர் - மகாராஷ்டிரா, கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம்.

2. நர்மதா நீர் - இராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம்.

3. காவேரி நீர் - கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி.

4. ராவி (ம) பியாஸ் நீர் - பஞ்சாப், ஹரியானா.

A. 1 மட்டும் B. 2 (ம) 4 C. 2 மட்டும் D. 4 மட்டும் E. விடை தெரியவில்லை

50) பின்வரும் காரணங்களுக்காக 1942-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் நாள் காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை இயற்றியது?

1. கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியினால்.

2. இந்தியாவை நோக்கி ஜப்பானியப் படைகள் புறப்பட்டதனால்.

3. ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் விடுதலை கோரிக்கையை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்துவதற்காக.

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

51) கீழ்கண்டவற்றைப் பொருத்துக.

a. சைமன் குழு - 1. 1928

b. நேரு அறிக்கை - 2. 1932

c. இரண்டாவது வட்டமேசை மாநாடு - 3. 1927

d. வகுப்புவாரித் தீர்வு - 4. 1931

A. 1 4 3 2 B. 3 1 4 2 C. 3 1 2 4 D. 2 4 1 3 E. விடை தெரியவில்லை

52) இந்தியாவில் முதன் முதலில் மெட்ரோ ரயில் திட்டம் அமைக்கப்பட்ட நகரம்?

A. சென்னை B. கொல்கத்தா C. டெல்லி D. மும்பை E. விடை தெரியவில்லை

53) பொருத்துக.

a. பிரார்த்தனா சமாஜம் - 1. ஸ்ரீ நாராயண குரு

b. ஆரிய சமாஜம் - 2. ஆத்மராம் பாண்டுரங்

c. தர்மபரிபாலன யோகம் - 3. ஜோதிபா பூலே

d. சத்யசோதக் சமாஜம் - 4. சுவாமி தயானந்த சரஸ்வதி

A. 4 1 2 3 B. 4 3 2 1 C. 2 4 1 3 D. 2 1 4 3 E. விடை தெரியவில்லை

54) கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்று எதனைக் குறிக்கிறது. 'ஒரு பொருளின் வெப்ப நிலையை ஒரு டிகிரி உயர்த்துவதற்கு தேவைப்படும் வெப்பமாகும்'

A. வெப்பக் கடத்தல் B. வெப்ப கதிர்வீச்சு C. வெப்பச் சலனம் D. வெப்ப ஏற்புத்திறன்

E. விடை தெரியவில்லை

55) தென் - மத்திய இரயில்வே தலைமையிடம் எங்கு உள்ளது?

A. சென்னை B. மும்பை C. செகந்திராபாத் D. விஜயவாடா

E. விடை தெரியவில்லை

56) சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. கிசான் கிரெடிட் கார்டு திட்டம் - 2016.

2. பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா - 1998.

3. பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி யோஜனா - 2019.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 3 மட்டும் D. அனைத்தும் E. விடை தெரியவில்லை

57) சிவாஜியின் தொடர்புடைய கீழ்கண்ட கூற்றுகளைக் காலவரிசைப்படுத்துக.

1. அப்சல்கான் மீதான தாக்குதல்

2. தோர்னா பகுதி கைப்பற்றுதல்

3. ஷெயிஸ்டகான் மீதான தாக்குதல்

A. 2-1-3 B. 2-3-1 C. 1-3-2 D. 3-1-2 E. விடை தெரியவில்லை

58) சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. மத்திய கண்காணிப்பு ஆணையம் (CVC) பணியாளர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

2. மத்திய தகவல் ஆணையர் (CIC) (ம) இதர தகவல் ஆணையர்கள் மறு நியமனத்திற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

59) உச்சநீதிமன்றம் தனது சொந்த தீர்ப்பை (அ) உத்தரவை மறுபரிசீலனை செய்ய அரசியலமைப்பின் எந்த விதி அனுமதிக்கிறது?

A. விதி 137 B. விதி 130 C. விதி 139 D. விதி 138 E. விடை தெரியவில்லை

60) தமிழக முதல்வரால் அரசு பள்ளி மாணவர்களுக்காக தொடங்கப்பட்ட திட்டத்தில் பெயர் என்ன?

A. இல்லம் தேடிக் கல்வி B. திறனிறத் தேர்வுத் திட்டம் C. கற்போம் கல்வி

D. அனைவருக்கும் கல்வி E. விடை தெரியவில்லை

61) அரசு பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலம் எது?

A. ஆந்திரபிரதேசம் B. கர்நாடகம் C. தமிழ்நாடு D. குஜராத்

E. விடை தெரியவில்லை

62) $1.25 \times 10^4$ ***Hz*** அதிர்வெண் உடைய ஒலியானது 334 மீவி$^{-1}$ வேகத்தில் பரவுகிறது எனில், அதன் அலைநீளம் என்ன?

A. 27.52 மீ B. 275.2 மீ C. 0.02752 மீ D. 2.752 மீ E. விடை தெரியவில்லை

63) சரியான இணையைக் கண்டுபிடி.

A. நியூக்ளியோசைடு - நைட்ரஜன் காரம் + பாஸ்பேட்.

B. பிரிமிடின்கள் - சைட்டோசின் (ம) சர்க்கரை.

C. பியூரின்கள் - அடினைன் (ம) குவானைன்.

D. நியூக்ளியோடைடு - நியூக்ளியோசைடு + சர்க்கரை.

E. விடை தெரியவில்லை

64) இந்திய குடியரசு தலைவரின் வீட்டோ அதிகாரம் பின்வருவனவற்றில் எதைக் கொண்டுள்ளது?

1. பாக்கெட் வீட்டோ
2. முழுமையான வீட்டோ
3. தற்காலிக வீட்டோ
4. வரையறுக்கப்பட்ட வீட்டோ

A. 2 (ம) 3 B. 1, 3 (ம) 4 C. 2, 3 (ம) 4 D. 1, 2 (ம) 3

E. விடை தெரியவில்லை

65) 'கல்லாதவரின் கடை' என்று வள்ளுவர் யாரைக் கூறுகிறார்?

A. நூல்களைக் கற்று அதிகம் பேசுபவர்
B. நூல்களைக் கற்று பேச மறுப்பவர்
C. நூல்களைக் கற்றுக் கொண்டிருப்பவர்
D. நூல்களைக் கற்று அவைக்கு அஞ்சுபவர்
E. விடை தெரியவில்லை

66) மருது சகோதரர்களால் 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' எப்போது வெளியிடப்பட்டது?

A. அக்டோபர் 16, 1799 B. ஜூலை 31, 1801 C. ஜூலை 31, 1800

D. அக்டோபர் 31, 1801 E. விடை தெரியவில்லை

67) கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

1. இந்தியாவின் பரப்பளவு 32,87,263 சதுர கிலோமீட்டராகும்.
2. இது உலக பரப்பளவில் சுமார் 4% ஆகும்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

68) கீழ்க்கண்டவற்றுள் அறிஞர் அண்ணா குறித்த கூற்றுகளில் சரியானது எது?

1. மெட்ராஸ் என்ற பெயரை சென்னை என மாற்றினார்.
2. சுயமரியாதை திருமணங்களை அங்கீகரித்தார்.
3. 1942ல் காஞ்சிபுரத்தில் 'திராவிட நாடு' இதழை வெளியிட்டார்.

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

69) கீழ்க்கண்டவற்றுள் ***GST*** கவுன்சிலில் யார் உறுப்பினராக இல்லை?

A. மத்திய நிதி அமைச்சர்
B. மத்திய நிதித்துறை இணை அமைச்சர்
C. அனைத்து மாநில முதல்வர்கள்
D. அனைத்து மாநிலங்களின் நிதி அமைச்சர்கள்
E. விடை தெரியவில்லை

70) 16 வது நிதி ஆணையத்தின் தலைவர் யார்?

A. விஜய் கெல்கர் B. ***Y.V.***ரெட்டி C. அரவிந்த் பனகாரியா D. ***N.K.***சிங்

E. விடை தெரியவில்லை

71) தமிழ்நாட்டின் 18 வது வனவிலங்கு சரணாயலயம் எது?

A. நெல்லை வனவிலங்கு சரணாலயம்
B. பெரியார் வனவிலங்கு சரணாலயம்
C. வல்லநாடு வனவிலங்கு சரணாலயம்
D. கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயம்
E. விடை தெரியவில்லை

72) கொடுக்கப்பட்ட ஆறுகளை வடக்கு - தெற்கு வரிசையில் எழுதுக.

A. மகாநதி - கிருஷ்ணா - சுபர்ணரேகா - கோதாரவரி - காவேரி.
B. சுபர்ணரேகா - மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - காவேரி.
C. மகாநதி - சுபர்ணரேகா - கோதாவரி - கிருஷ்ணா - காவேரி.
D. சுபர்ணரேகா - மகாநதி - கிருஷ்ணா - கோதாவரி - காவேரி.
E. விடை தெரியவில்லை

73) தவறான இணை எது?

A. நீதி புனராய்வு - அமெரிக்க அரசியலமைப்பு.
B. சட்டத்தின் ஆட்சி - இங்கிலாந்து அரசியலமைப்பு.
C. இராஜ்யசபா உறுப்பினர்களின் தேர்தல் - ஜெர்மனி அரசியலமைப்பு.
D. பொதுநல வழக்கு என்ற கருத்து - அமெரிக்க அரசியலமைப்பு.
E. விடை தெரியவில்லை

74) 2024 - ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியா உலகின் எத்தனையாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக உள்ளது? ($GDP$ மூலம் அளவிடல்)

A. 3வது B. 2வது C. 4வது D. 5வது E. விடை தெரியவில்லை

75) மக்களவை கூட்டத்தை நடத்துவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன?

A. சபையின் மொத்த உறுப்பினர்களில் $\frac{1}{6}$ பங்கு.
B. சபையின் மொத்த உறுப்பினர்களில் $\frac{1}{10}$ பங்கு.
C. சபையின் மொத்த உறுப்பினர்களில் $\frac{1}{4}$ பங்கு.
D. சபையின் மொத்த உறுப்பினர்களில் 50%
E. விடை தெரியவில்லை

76) "அழுக்காறுடையான் கண் ஆக்கம்போன் றில்லை" - இதில் அழுக்காறு என்பதன் பொருள் யாது?

A. சினம் B. வெகுளாமை C. பொறாமை D. தீமை E. விடை தெரியவில்லை

77) தவறான இணை எது?

| தமிழ்நாடு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. மாநகராட்சிகள் | - | 25 |
| 2. ராம்சார் தளங்கள் | - | 80 |
| 3. சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | - | 34 |

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1, 3 D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

78) பின்வருவனவற்றுள் தவறானது எது?

A. அதிகளவு சிறுநீர் வெளியேறுதல் - பாலியூரியா.
B. இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரித்தல் - ஹைபர் கிளைசீமியா.
C. நீரிழப்பினால் ஏற்படும் தாகம் - பாலிடிப்சியா.
D. அதிகப்படியான குளுக்கோஸ் சிறுநீரில் வெளியேறுதல் - பாலிபேஜியா.
E. விடை தெரியவில்லை

79) ஆலய நுழைவுச் சட்டத்தை சென்னை மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றியவர் யார்?

A. குமாரசாமி ராஜா B. பி.டி.ராஜா C. பொப்பிலி ராஜா D. இராஜாஜி
E. விடை தெரியவில்லை

80) தமிழ்நாட்டில் 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தின் நோக்கம்

A. புற்றுநோய் மூலம் ஏற்படும் இழப்பைக் குறைத்தல்.
B. சாலைவிபத்தின் மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்.
C. தொற்றா நோய்க்கான மருத்துவம்.
D. ஊட்டச்சத்து குறைபாடு மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்.

E. விடை தெரியவில்லை

81) சிவாஜியின் அமைச்சரவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A. அஷ்டதிக்கஜங்கள் B. மந்திரி பரிஷத் C. அஷ்டபிரதான் D. நவரத்தினங்கள்

E. விடை தெரியவில்லை

82) எப்படிப்பட்ட அரசினின் கீழ் மக்கள், தங்கி வாழ்வார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

A. மென்சொல் விரும்புவர் B. கடுஞ்சொல் பொறுப்பவர் C. கடுஞ்சொல் பொறுக்காதவர்

D. பகைமையை வெல்பவர் E. விடை தெரியவில்லை

83) கேபினட் தூதுக்குழ நியமிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்?

A. அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க B. சுதந்திரத்தை அறிவிக்க

C. இந்தியாவை பிரிப்பதற்கு D. புதிய கவர்னர் ஜெனரலை நியமிக்க

E. விடை தெரியவில்லை

84) தவறான இணை எது?

A. $Na_2Co_3$ - சோப்பு தொழிற்சாலை.

B. $NaHCo_3$ - கேக் (ம) ரொட்டிகளை மென்மையாக மாற்ற.

C. $CaOCl_2$ - சிலைகளுக்கான வார்ப்புகளைச் செய்ய.

D. $CaSo_4.\frac{1}{2}H_2O$ - முறிந்த எலும்புகளை ஒட்ட வைக்க.

E. விடை தெரியவில்லை

85) சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரசின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?

A. அரவிந்த கோஷ் B. பால கங்காதர திலகர் C. ∴பெரோஸ் ஷா மேத்தா

D. லாலா லஜபதிராய் E. விடை தெரியவில்லை

86) நீதிக்கட்சியின் முதல் மாநாடு நடைபெற்ற இடம்

A. கோயமுத்தூர் B. சேலம் C. திருச்சி D. மதுரை E. விடை தெரியவில்லை

87) கீழ்க்கண்டவற்றில் எது அறுவை சிகிச்சையின் போது மயக்கமூட்டியாக பயன்படுத்தப்படுவதில்லை?

A. நைட்ரஸ் ஆக்ஸைடு B. குளோரோ∴பார்ம் C. ஈதர் D. ஆஸ்பிரின்

E. விடை தெரியவில்லை

88) நீரின் மூலம் பரவாத நோய்களுள் ஒன்று?

A. டைபாய்டு B. காலரா C. காசநோய் D. மஞ்சள் காமாலை

E. விடை தெரியவில்லை

89) பாரன்ஹீட் அளவீட்டிற்கும் செல்சியஸ் அளவீட்டிற்கும் உள்ள தொடர்பைக் கொண்ட சரியான சமன்பாடு எது?

A. $\frac{F-32}{5}=\frac{c}{9}$ B. $\frac{F-32}{9}=\frac{c}{5}$ C. $\frac{C-32}{5}=\frac{F}{9}$ D. $\frac{C-32}{9}=\frac{C}{273.15}$

E. விடை தெரியவில்லை

90) கீழ்க்கண்டவற்றுள் எந்த குடியரசுத் தலைவர் லோக் சபா சபாநாயகராக பணியாற்றியவர்?

A. டாக்டர்.ஜாகிர் உசேன் B. $N.$ சஞ்சீவ ரெட்டி C. $Dr.S.D.$ ஷர்மா D. $V.V.$கிரி

E. விடை தெரியவில்லை

91) கலெக்டர் ஜாக்சன் (ம) வீரபாண்டிய கட்டபொம்மன் ராமநாதபுரம் சந்திப்பு நிகழ்வை குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணை குழுவில் இடம் பெற்றவர்கள்

1. வில்லியம் பிரௌன்  2. வில்லியம் ஓரம்
3. ஜான் காஸாமேயர்  4. $S.R.$ லூஷிங்டன்

A. 1, 2 மட்டும்  B. 2, 3 மட்டும்  C. 3, 4 மட்டும்  D. 1, 2 (ம) 3
E. விடை தெரியவில்லை

92) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது எப்போது?

A. 2 பிப்ரவரி 2006  B. 2 பிப்ரவரி 2007  C. 2 பிப்ரவரி 2008  D. 2 பிப்ரவரி 2009
E. விடை தெரியவில்லை

93) பின்வரும் சட்டங்களைப் பொருத்துக.

a. சட்ட அளவீட்டுச் சட்டம் - 1. 2009
b. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 2. 1986
c. அத்தியாவசியப் பொருள்கள் பராமரிப்புச் சட்டம் - 3. 1980
d. அத்தியாவசிய பொருள்கள் சட்டம் - 4. 1955

A. 2 1 4 3  B. 1 2 3 4  C. 4 3 2 1  D. 3 4 1 2  E. விடை தெரியவில்லை

94) கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வகளை காலவரிசைப்படுத்துக.

1. புலித்தேவரின் இறப்பு
2. குயிலியின் இறப்பு
3. கட்டபொம்மனின் இறப்பு
4. மருது சகோதரர்களின் இறப்பு

A. 2-3-1-4  B. 1-2-3-4  C. 1-3-2-4  D. 3-1-4-2  E. விடை தெரியவில்லை

95) சரியான இணை எது?

1. 101 வது சட்டத்திருத்தம் - $GST$
2. 104 வது சட்டத்திருத்தம் - $SC/ST$ இடஒதுக்கீடு
3. 103 வது சட்டத்திருத்தம் - பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

A. 1, 2  B. 2, 3  C. 1, 3  D. 1, 2, 3  E. விடை தெரியவில்லை

96) நம்பிக்கையில்லா தீர்மானம் லோக்சபாவில் ஏற்கப்பட தேவையான ஆதரவு?

A. 80 உறுப்பினர்கள்  B. 100 உறுப்பினர்கள்  C. 160 உறுப்பினர்கள்
D. 60 உறுப்பினர்கள்  E. விடை தெரியவில்லை

97) ஒரு நிறுத்த மையம் (சகி) திட்டம் (One Stop Center) எதனுடன் தொடர்புடையது?

A. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுதல்.
B. ரேஷன் வழங்குதல்.
C. சுயதொழில் தொடங்குதல்.
D. திறன் (ம) பயிற்சி வழங்குதல்.
E. விடை தெரியவில்லை

98) இந்திய ரிசர்வ் வங்கி பற்றிய சரியான இணை எது?

1. உருவாக்கம் - 1935, ஏப்ரல் 1.
2. பரிந்துரை - ஹில்டன் யங் கமிஷன்.
3. தேசியமயமாதல் - 1955, ஜனவரி 1.

4. முதல் இந்திய கவர்னர் - O. ஸ்மித்.

A. 2, 3 B. 1, 3 C. 1, 2 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

99) ஈர்ப்பு மாறிலி ($\boldsymbol{G}$) -ன் அலகு

A. $N^2m^2kg^2$ B. $Nmkg^2$ C. $N^2mkg^{-2}$ D. $Nm^2kg^{-2}$ E. விடை தெரியவில்லை

100) சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. பிரயாகை மெய்கீர்த்தியை இயற்றியவர் ஹரிசேனர் ஆவார்.
2. முதன் முதலில் வெள்ளி நாணயத்தை வெளியிட்ட குப்த அரசர் முதலாம் சந்திர குப்தராவார்.

A. 1 சரி, 2 தவறு B. 1 தவறு, 2 சரி C. இரண்டும் சரி D. இரண்டும் தவறு
E. விடை தெரியவில்லை

101) 'திட்டமிடுதலில் ஏழ்மை' என்ற நூலை எழுதியவர்?

A. எம்.என்.ராய் B. கே.என்.ராய் C. பி.எஸ்.மின்ஹாஸ் D. எம்.விஸ்வேஸ்வரய்யா
E. விடை தெரியவில்லை

102) தவறான இணை எது?

A. மெட்ராஸ் இந்து அசோசியேசன் - வீரசலிங்கம் பந்தலு.
B. மெட்ராஸ் திராவிடன் அசோசியேசன் - அயோத்திதாச பண்டிதர்.
C. மெட்ராஸ் மகாஜன சபை - அனந்த சார்லு.
D. ஆதிதிராவிட மகாஜன சபை - இரட்டைமலை சீனிவாசன்.
E. விடை தெரியவில்லை

103) எந்த நில உரிமை முறையில், சாகுபடி செய்பவர் அரசிற்கு நிலவரி செலுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளார்?

A. மகல்வாரி முறை B. இரயத்துவாரி முறை C. ஜமீன்தாரி முறை
D. இடைத்தரகர்கள் முறை E. விடை தெரியவில்லை

104) சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. விதவை மகள் திருமண நிதியுதவித்திட்டம் - டாக்டர்.தருமாம்பாள்.
2. கலப்பு திருமண நிதியுதவித் திட்டம் - முத்துலெட்சுமி.
3. விதவை மறுமண நிதியுதவித் திட்டம் - மூவலூர் இராமாமிர்தம்.

A. 1, 3 B. 2, 3 C. 2 மட்டும் D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

105) பொருத்துக.

a. அனிலினோபிரமிடின் - 1. களைக்கொல்லி
b. 2, 4 - D - 2. எலிக்கொல்லி
c. ஜிங்க் பாஸ்பைட் - 3. பூஞ்சைக் கொல்லி
d. பாராத்தியான் - 4. பூச்சிக்கொல்லி

A. 3 1 2 4 B. 3 2 1 4 C. 2 1 3 4 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

106) இரு சக்கர வாகனம் ஒன்றில் விலை 2 ஆண்டுகளுக்கு முன் ரூ.70000 ஆக இருந்தது. அதன் மதிப்பு ஆண்டுதோறும் 4% வீதம் குறைகிறது. அதன் தற்போதைய மதிப்பைக் காண்க.

A. ரூ.64400 B. ரூ.64512 C. ரூ.65500 D. ரூ.66500 E. விடை தெரியவில்லை

107) $+$ என்பது $\times$, $-$ என்பது $\div$, $\times$ என்பது $+$, $\div$ என்பது $-$ குறித்தால், $12 - 3 + 5 \times 20$ -ன் மதிப்பு

A. 40 B. 100 C. 29 D. 39 E. விடை தெரியவில்லை

108) அமுதா, ஒரு சேலையை 18 நாட்களில் நெய்வர். அஞ்சலி அமுதாவை விட நெய்வதில் இரு மடங்கு திறமைசாலி. இருவரும் இணைந்து நெய்தால், அந்தச் சேலையை எத்தனை நாட்களில் நெய்து முடிப்பார்?

A. 6 நாட்கள் B. 9 நாட்கள் C. 12 நாட்கள் D. 24 நாட்கள்
E. விடை தெரியவில்லை

109) $(x^2y + xy^2)$ மற்றும் $(x^2 + xy)$ ஆகியவற்றின் $HCF$ காண்க.

A. $(x + y)$ B. $xy$ C. $x(x + y)$ D. $(x^2 + y^2)$ E. விடை தெரியவில்லை

110) x என்பது y -ன் வர்க்கத்திற்கு எதிர்விகிதத்தில் உள்ளது. x = 1 என கொடுக்கப்பட்டால் y = 2 என கிடைக்கும் எனில் y = 6 என கொடுக்கப்பட்டால் x = ?

A. 3 B. 9 C. $\frac{1}{3}$ D. $\frac{1}{9}$ E. விடை தெரியவில்லை

111) ஒரு தொகை ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் 2 ஆண்டுகளில் ரூ.6200 எனவும், 3 ஆண்டுகளில் ரூ.6800 எனவும் உயர்கிறது எனில் அந்த தொகையைக் காண்க.

A. ரூ.5000 B. ரூ.5800 C. ரூ.5400 D. ரூ.4800 E. விடை தெரியவில்லை

112) $(x^3 - 27), (x - 3)^2, (x^2 - 9)$ இவற்றின் $LCM$ காண்க.

A. $(x + 3)(x - 3)$ B. $(x - 3)^2\,(x^2 + 3x + 9)$
C. $(x + 3)(x - 3)(x^2 + 3x + 9)$ D. $(x - 3)^2(x + 3)(x^2 + 3x + 9)$
E. விடை தெரியவில்லை

113) ஒருவர் ரூ.300க்கு 75 மாம்பழங்கள் வாங்கி அவற்றில் 50 மாம்பழங்களை ரூ.300க்கு விற்பனை செய்தார். அனைத்து மாம்பழங்களும் விற்பனையான பின் அவரது இலாபம் (அ) நட்டம் காண்க.

A. ரூ.150 B. ரூ.250 C. ரூ.100 D. ரூ.50 E. விடை தெரியவில்லை

114) $1^3 + 2^3 + 3^3 + \ldots\ldots\ldots\ldots + k^3 = 4356$ எனில் $k$ -ன் மதிப்பு காண்க.

A. 11 B. 10 C. 12 D. 9 E. விடை தெரியவில்லை

115) சதீஸ்குமார் என்பவர் ஒரு கடன் வழங்கு நபரிடமிருந்து ரூ.52000 ஐ ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் கடனாகப் பெறுகிறார். 4 ஆண்டு கழித்து சதீஸ்குமார் 79,040 ஐ மொத்த தொகையாக செலுத்தினார் எனல் வட்டிவீதம் காண்க.

A. 12% B. 14% C. 13% D. 15% E. விடை தெரியவில்லை

116) A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 16 நாட்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 48 நாட்களில் முடிப்பார் எனில், B தனியே அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A. 12 B. 16 C. 22 D. 24 E. விடை தெரியவில்லை

117) ஒரு குறிப்பிட்ட குறியீடு மொழியில் $MEDICINE$ என்ற வார்த்தை $EOJDJEFM$ என ம்ாறி குறியீடு செய்யப்பட்டுள்ளது எனில், $COMPUTER$ என்ற வார்த்தைக்கான குறியீடு எது எனக் காண்க.

A. $CNPRVUFQ$ B. $CMNQTUDR$ C. $RFUVQNPC$ D. $RNVFTUDQ$
E. விடை தெரியவில்லை

118) $F(n)$ என்பதில் $n = 8$ எனில், பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?

A. $F(8) = F(9) + F(10)$ B. $F(8) = F(7) + F(6)$ C. $F(8) = F(10) - F(9)$
D. $F(8) = F(7) - F(6)$ E. விடை தெரியவில்லை

119) கலை, 168 மி.மீ (ம) 196 மி.மீ அளவுள்ள காகிதத் தாளை, தன்னால் முடிந்த அளவு மிகப்பெரிய அளவில் சமமான சதுரங்களாக வெட்ட விரும்புகிறார் எனில், அவர் வெட்டிய மிகப் பெரிய சதுரத்தின் பக்க அளவு என்ன?

A. 28மி.மீ B. 26மி.மீ C. 24மி.மீ D. 22மி.மீ E. விடை தெரியவில்லை

120) பள்ளிகளுக்கிடையிலான வினாடிவினா போட்டிக்கு, பள்ளியின் சார்பாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க 26 மாணவர்கள் (ம) 15 மாணவிகளுக்கு ஆசிரியர் பயிற்சியளிக்கிறார் எனில், இவர்களிலிருந்து ஒருவரை ஆசிரியர் தேர்ந்தெடுக்க எத்தனை விதமான வாய்ப்புகள் உள்ளன?

A. 41 B. 26 C. 15 D. 390 E. விடை தெரியவில்லை

121) $\frac{3}{4} \div \left(\frac{5}{8}+\frac{1}{2}\right) =$ ________

A. $\frac{13}{10}$ B. $\frac{2}{3}$ C. $\frac{3}{2}$ D. $\frac{5}{8}$ E. விடை தெரியவில்லை

122) ஒரு மாணவன் ஓர் எண்ணை $\frac{8}{9}$ ஆல் பெருக்குவதற்குப் பதிலாக, தவறுதலாக $\frac{8}{9}$ ஆல் வகுத்து விட்டார். அவருக்கு கிடைத்த விடைக்கும், சரியான விடைக்குமான வித்தியாசம் 34 எனில், அந்த எண்ணைக் காண்க.

A. 144 B. 162 C. 134 D. 146 E. விடை தெரியவில்லை

123) $\frac{10^x}{10^{-3}} = 10^9$ எனில் $x$ -ன் மதிப்பு .............

A. 4 B. 5 C. 6 D. 7 E. விடை தெரியவில்லை

124) 4489 செ.மீ$^2$ பரப்பளவு கொண்ட ஒரு தலைவரின் உருவப்படமானது சதுர வடிவில் உள்ளது. மேலும் படத்தைச் சுற்றிலும் 2 செ.மீ அளவு கொண்ட மரச்சட்டம் உள்ளது எனில், மரச்சட்டத்தின் பரப்பளவு என்ன?

A. 576 செ.மீ$^2$ B. 552 செ.மீ$^2$ C. 572 செ.மீ$^2$ D. 566 செ.மீ$^2$

E. விடை தெரியவில்லை

125) தேன்மொழியின் தற்போதைய வயது முரளியின் வயதை விட 5 ஆண்டுகள் அதிகம் ஆகும். 5 ஆண்டுகளுக்கு முன் தேன்மொழிக்கும் முரளிக்கும் இடையே இருந்த வயது விகிதம் 3:2 எனில், அவர்களின் தற்போதைய வயது என்ன?

A. 20, 15 B. 25, 15 C. 30, 20 D. 25, 10 E. விடை தெரியவில்லை

126) சமமான ஆரம் (ம) உயரம் உடைய கூம்பு, கோளம், உருளை ஆகியவற்றின் கன அளவுகளின் விகிதம்

A. 1:4:3 B. 1:3:4 C. 4:3:1 D. 3:4:1 E. விடை தெரியவில்லை


127) ஒரு கூட்டுத்தொடர் வரிசையின் 6வது (ம) 8வது உறுப்புகளின் விகிதம் 7:9 எனில், 9வது (ம) 13வது உறுப்புகளின் விகிதம் காண்க.

A. 5:7 B. 7:5 C. 3:7 D. 7:3 E. விடை தெரியவில்லை

128) 0, 6, 24, 60, 120, 210, ................

A. 240 B. 290 C. 336 D. 504 E. விடை தெரியவில்லை

129) 2 என்ற எண்ணிற்கு எதிர்பக்கம் உள்ள எண் யாது?



A. 6 B. 5 C. 4 D. 1 E. விடை தெரியவில்லை

130) இளவரசன் குஸ்ருவுடன் இணைந்து கலகத்தை தூண்டிவிட்டதாக ஜஹாங்கீரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்?

A. குரு அர்ஜீன் தேவ் B. குரு ஹர் கோபிந்த் C. குரு தேஜ் பகதூர்

D. குரு ஹர் பாய் E. விடை தெரியவில்லை

131) மக்கள் நலனை மேம்படுத்துவதற்காக ஒரு சமூக ஒழுங்கை அரசு பாதுகாக்க வேண்டும் என்று எந்த அரசியலமைப்பு சட்டப்பிரிவு கூறுகிறது?

A. விதி 38 B. விதி 39 C. விதி 37 D. விதி 36 E. விடை தெரியவில்லை

132) பிற்காலச் சோழர் காலத்தில் 'இறையிலி' என்பது ............. உடன் தொடர்புடையது.

A. வரி வசூலிக்கப்பட்ட நிலம் B. கோயில் நிலத்திற்கு விதிக்கப்பட்ட வரி

C. வரி இல்லாத நிலம் D. குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திற்கான வரி

E. விடை தெரியவில்லை

133) இந்தியாவின் இருப்பிடம் (ம) பரப்பளவு குறித்து பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

1. கடக ரேகையினால் இந்தியா ஓரளவிற்கு இரண்டு சமப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது

2. பரப்பளவில் உலகின் இரண்டாவது பெரிய நாடு இந்தியா.

3. அட்ச (ம) தீர்க்க ரேகைகளுக்கு இடையே உள்ள இடைவெளி கிட்டத்தட்ட $30^{o}$ ஆகும்.4. இந்திய திட்ட தீர்க்கரேகை போபால் வழியாக கடந்து செல்லும்.

A. 1 (ம) 2 B. 1, 3 (ம) 4 C. 1 (ம) 3 D. 1, 2 (ம) 4

E. விடை தெரியவில்லை

134) பொருத்துக.

a. அயனமண்டல பசுமை மாறாக் காடுகள் - 1. முட்புதர்கள்

b. அயனமண்டல இலையுதிர் காடுகள் - 2. ஓதக்காடுகள்

c. வறண்ட பாலைவனங்கள் - 3. அயன மண்டல மழைக்காடுகள்

d. சதுப்பு நிலக்காடுகள் - 4. பருவக்காற்றுக் காடுகள்

A. 3 4 1 2 B. 4 3 2 1 C. 2 1 3 4 D. 4 2 3 1 E. விடை தெரியவில்லை

135) கீழ்க்காணப்படுபவைகளில் எது 'ஒன்றிய பிரதேசங்களின்' முந்தைய பெயர்கள் கிடையாது?

A. அட்டவணையில் சேர்க்கப்பட்ட மாவட்டங்கள்.

B. தலைமை ஆணையர்களின் மாகாணங்கள்.

C. பகுதி C மற்றும் பகுதி D மாநிலங்கள்.

D. தனித்துவமான மத்தியப் பகுதிகள்.

E. விடை தெரியவில்லை

136) எந்த அரசியலமைப்பு திருத்தச்சட்டம் கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிப்பதற்காகப் பிரிவு 43B -யை இணைத்தது?

A. 42வது சட்டத்திருத்தம், 1976 B. 44வது சட்டத்திருத்தம், 1978

C. 86வது சட்டத்திருத்தம், 2002 D. 97வது சட்டத்திருத்தம், 2011

E. விடை தெரியவில்லை

137) பின்வருவனவற்றில் இந்திய நிதி ஆணையத்தின் செயல்பாடு எது?

1. வரிகளின் நிகர வருவாயின் பங்குகளின் ஒதுக்கீடு.

2. மானியங்களை நிர்வகிக்கும் கொள்கைகளை வகுத்தல்.

3. மத்திய (ம) மாநில அரசுகளுக்கு இடையே உள்ள நிதியுறவைப் பாதுகாப்பது.

A. 1 (ம) 2 B. 1, 2 (ம) 3 C. 1 (ம) 3 D. 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

138) எந்த அகழ்வாராய்ச்சி பகுதியில் சர்.மார்டிமர் வீலர் அறிவியல் (ம) மண் அடுக்கு முறையைப் பயன்படுத்தினார்?

A. பல்லாவரம் B. அத்திரம்பாக்கம் C. அரிக்கமேடு D. காயல்

E. விடை தெரியவில்லை

139) ஒரு தூதுவனின் குணங்களாகத் திருவள்ளுவர் எவற்றைக் கூறுகிறார்?

A. அறிவு, தோற்றம், கல்வி B. அன்பு, அறிவு, தெளிந்த பேச்சு

C. கடமை, காலமறிதல், இடமறிதல் D. தூய்மை, துணைமை, துணிவு

E. விடை தெரியவில்லை

140) ஊழையும் உப்பக்கம் காண்பவர் - யார்?

A. சான்றோர் B. இளையோர் C. விடாமுயற்சி உடையோர் D. சோம்பேறி

E. விடை தெரியவில்லை

141) ஜனனி சிசு சுரக்ஷா காரியகரம் இலவச டிராப் பேக் சேவையில் பின்வரும் கூற்றுகளில் எவை உண்மை?

1. $JSSK$ ஆனது $TNHSP$ -ஆல் தமிழ்நாட்டில் ஒரு முன்னோடி திட்டமாகத் தொடங்கப்பட்டது.

2. டிராப் பேக் வாகனம் ஒரு வயது குழந்தையையும் தாயையும் கொண்டு செல்ல வழி வகை செய்யப்பட்டுள்ளது.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1, 2 சரி D. 1, 2 தவறு E. விடை தெரியவில்லை

142) மதராஸ் மாநிலம், தமிழ்நாடு என்று பெயர் மாற்ற வேண்டி விருதுநகர் சங்கரலிங்கனார் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த ஆண்டு?

A. 1956 ஜூலை B. 1956 அக்டோபர் C. 1965 ஜூலை D. 1965 அக்டோபர்

E. விடை தெரியவில்லை

143) கீழ்க்கண்டவற்றில் எவை நீதிக்கட்சியின் சாதனை அல்ல?

A. 1921 (ம) 1922 ஆம் ஆண்டின் வகுப்புவாத அரசாணைகளை நிறைவேற்றியது.

B. அரசு பணியாளர் தேர்வாணையம் உருவாக்கப்பட்டது.

C. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

D. தேவதாசி முறையை ஒழித்தது.

E. விடை தெரியவில்லை

144) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (ம) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உருவாக்கப்பட்ட ஆண்டு?

A. 1961 (ம) 1970 B. 1951 (ம) 1960 C. 1970 (ம) 1960 D. 1960 (ம) 1951

E. விடை தெரியவில்லை

145) பொருத்துக.

a. சான்ஹீதாரோ - 1. ஆரல் ஸ்டீன்

b. குல்லி - 2. $J.P.$ ஜோஷி

c. ராகி கார்ஹி - 3. $A.C.$ மஜூம்தார்

d. தோலவிரா - 4. அமரேந்திரநாத்

A. 2 1 3 4 B. 3 1 2 4 C. 3 1 4 2 D. 4 3 1 2 E. விடை தெரியவில்லை

146) நீதிப்புனராய்வு பற்றிய கீழ்க்காணப்படும் வாக்கியங்களில் எது சரியானவை?

1. நீதிப்புனராய்வுக் கோட்பாடு *UK* -ல் தோன்றியது.
2. இந்திய அரசியலமைப்பு நீதித்துறைக்கு நீதி புனராய்வு அதிகாரத்தை வழங்குகிறது.
3. நீதிபுனராய்வு அதிகாரத்தை அரசியலமைப்பு திருத்தம் மூலம் குறைக்க முடியாது.

A. 1, 2 சரி B. 2, 3 சரி C. 1, 3 சரி D. 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை

147) காகா காலேகர் ஆணையம் எதனோடு தொடர்புடையது?

A. பட்டியலின ஜாதிகளுக்கான தேசிய ஆணையம்.
B. மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையம்.
C. பிற்படுத்தப்பட்டோர் தேசிய ஆணையம்.
D. ஆங்கிலோ இந்தியருக்கான அமைப்பு.
E. விடை தெரியவில்லை

148) கீழ்க்கண்டவற்றுள் எந்த கமிட்டி தேர்தல் சீர்திருத்தத்துடன் தொடர்பில்லாதது?

1. தார்குண்டே கமிட்டி
2. சர்க்காரியா கமிட்டி
3. இந்திரஜித் குப்தா கமிட்டி
4. தினேஷ் கோஸ்வாமி கமிட்டி

A. 2, 4 B. 1, 2 C. 2 மட்டும் D. 2, 3 மட்டும் E. விடை தெரியவில்லை

149) அலையாத்திக் காடுகள் பற்றிய சரியான கூற்று எது?

1. இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் (ம) கடற்குழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.
2. சதுப்பு நிலக் காடுகள் (ம) டெல்டா காடுகள் என்றும் அழைக்கப்படுகிறது.
3. கங்கை - பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப்பெரிய சதுப்பு நிலக்காடுகள் உள்ளன.
4. மகாநதி, கோதாவரி (ம) கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் உள்ளன.

A. 1, 2 மட்டும் B. 1, 2 4 மட்டும் C. 1, 2, 3 மட்டும் D. அனைத்தும் சரி
E. விடை தெரியவில்லை

150) கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானவை எது?

A. பாரம்பரிய விவசாய முறை என்பதால் தன்னிறைவு வேளாண்மை, அதிகமான உற்பத்தியை அளிக்கிறது.
B. இடப்பெயர்வு வேளாண்மை “வெட்டுதல்” (ம) “எரித்தல்” வேளாண்மை என்றும் அழைக்கப்படுகிறது.
C. தீவிர வேளாண்மை என்பது இயந்திரங்கள் (ம) நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவது.
D. படிக்கட்டு முறை வேளாண்மை, மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படுகிறது.
E. விடை தெரியவில்லை

151) ஒரு கட்சி ‘தேசிய கட்சி’ என்ற அங்கீகாரத்தைப் பெற கீழ்கண்ட எந்த அளவுகோள்களின் படி இருக்க வேண்டும்?

1. ஏதேனும் 4 மாநிலங்களில் 6% வாக்குகளை பெற்றிருத்தல்.
2. மக்களவைக்கான தேர்தலில் 2% உறுப்பினர்களை ஏதேனும் 3 மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. ஏதேனும் 4 மாநிலங்களில் மாநில கட்சி என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல்.

4. ஏதேனும் மூன்று மாநிலங்களில் 8% வாக்குகளைப் பெற்றிருத்தல்.

A. 1, 2 (ம) 3 இவற்றில் ஏதேனும் ஒன்று அவசியம்.

B. 3 (ம) 4 இவற்றில் ஏதேனும் ஒன்று அவசியம்.

C. 2, 3 (ம) 4 இவற்றில் ஏதேனும் ஒன்று அவசியம்.

D. 1, 2 (ம) 4 இவற்றில் ஏதேனும் ஒன்று அவசியம்.

E. விடை தெரியவில்லை

152) பொருத்துக.

| படைப்புகள் | அரசியல் |
|---|---|
| a. சாகுந்தலம் (தெலுங்கு) | - 1. ஸ்ரீ நாதா |
| b. ஹரவிலாசம் | - 2. வதமலவி அன்னகாலையம் |
| c. இருசமய விளக்கம் | - 3. பிள்ளலமரி பினா வீரபத்ரா கவி |
| d. சிதம்பர புராணம் | - 4. திருமலை நாதர் |

A. 4 2 3 1 B. 3 1 2 4 C. 3 2 1 4 D. 4 1 2 3 E. விடை தெரியவில்லை

153) மத்திய - மாநில வருவாய் பகிர்ந்தளிப்பு பற்றி கீழ்க்கண்ட எந்த அரசியலமைப்புச் சட்ட விதிகள் விளக்குகின்றன?

A. விதி 268 - 276 B. விதி 277 - 280 C. விதி 352 - 356 D. விதி 378 - 379

E. விடை தெரியவில்லை

154) எந்த குழு இந்தியாவில் $GST$ -யை முன்மொழிந்தது?

A. ரங்கராஜன் குழு B. கெல்கர் பணிக்குழு C. நரசிம்மன் குழு

D. அர்ஜுன்-சென் குப்தா குழு E. விடை தெரியவில்லை

155) இந்தியாவில் வரிகளை வகைப்படுத்துவது பற்றிய உண்மை எது?

1. நேரடி (ம) மறைமுக வரி 2. வரி (ம) வருமான (ம) மூலதன வரி

3. தனிநபர் வரி (ம) வருமான வரி

A. 1, 2 மட்டும் B. 2, 3 மட்டும் C. 1 மட்டும் D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

156) வருவாய் செலவு வருவாய் வரவுகளை விட அதிகமாக இருந்தால் அது?

A. வரவு செலவு பற்றாக்குறை B. நிதிப் பற்றாக்குறை C. வருவாய் பற்றாக்குறை

D. அடிப்படை பற்றாக்குறை E. விடை தெரியவில்லை

157) பொருத்துக. (உயிர்கோள காப்பகங்கள்)

| | |
|---|---|
| a. நாக்ரெக் | - 1. அசாம் |
| b. சிம்லிபால் | - 2. ஒடிசா |
| c. குளிர் பாலைவனம் | - 3. அருணாச்சல பிரதேசம் |
| d. திகாங் - திபாங் | - 4. ஹிமாச்சல் பிரதேசம் |
| e. திப்ரு - சைகோவ் | - 5. மேகாலயா |

A. 2 5 1 3 4 B. 5 3 4 2 1 C. 3 1 2 5 4 D. 5 2 4 3 1

E. விடை தெரியவில்லை

158) பாஸ்கல் விதி பின்வரும் எதில் பயன்படுகிறது?

A. நீரியல் உயர்த்தி B. தடை செலுத்தி C. அழுத்தப்பட்ட பொதி

D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

159) புதிய வேளாண்மை கொள்கை தொடங்கப்பட்ட ஆண்டு

A. 2010 B. 2000 C. 2005 D. 1999 E. விடை தெரியவில்லை

160) கீழ்க்கண்ட கூற்றுகளில் எது தவறானது?

1. மைய விலக்கு விசை, மைய நோக்கு விசைக்கு எதிர் திசையில் செயல்படும்.

2. ஈர்ப்பு விசை, உராய்வு விசை, காந்த விசை, நிலை மின்னியல் விசை (ம) இதுபோன்ற எந்த ஒரு விசையும் மையவிலக்கு விசை போன்றே செயல்படும்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

161) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

1. தாதாபாய் நௌரோஜி இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.

2. 1906, ஆகஸ்ட் 7-ல் சுதேசி இயக்கம் வங்காளத்திலுள்ள கல்கத்தா நகர அரங்கில் முறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

3. கதார் கட்சியின் நிறுவனத் தலைவர் சோஹன் சிங் பக்னா ஆவார்.

A. 1, 2 B. 1, 3 C. 1 மட்டும் D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

162) பொருத்துக.

a. சிவாஜி பிறப்பு - 1. 1665

b. புரந்தர் உடன்படிக்கை - 2. 1666

c. சிவாஜி ஆக்ரா விஜயம் - 3. 1627

d. சிவாஜி சத்ரபதி பட்டம்
பட்டம் சூட்டிக் கொள்ளுதல் - 4. 1674

A. 1 2 4 3 B. 3 1 2 4 C. 2 4 3 1 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

163) ஒரு பொருள் இயங்கும் திசைக்கு எதிரான திசையில் விசையைச் செலுத்தினால் அப்பொருளின் இயக்கமானது

A. நின்று விடும் B. அதிக வேகத்தில் இயங்கும்

C. குறைந்த வேகத்தில் இயங்கும் D. வேறு திசையில் இயங்கும்

E. விடை தெரியவில்லை

164) காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

1. மாதவராவ்

2. பாலாஜி விஸ்வநாத்

3. முதலாம் பாஜிராவ்

4. பாலாஜி பாஜிராவ்

A. 2-3-4-1 B. 3-4-2-1 C. 4-1-3-2 D. 1-3-4-2 E. விடை தெரியவில்லை

165) பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையை தேர்வு செய்க.

1. கிழக்கிந்திய கழகம்

2. சென்னை மகாஜன சங்கம்

3. சென்னை வாசிகள் சங்கம்

4. இந்திய சங்கம்

A. 2-1-3-4 B. 2-3-1-4 C. 3-4-1-2 D. 3-4-2-1 E. விடை தெரியவில்லை

166) உலக சுனாமி விழிப்புணர்வு தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

A. நவம்பர் 04 B. நவம்பர் 05 C. நவம்பர் 06 D. நவம்பர் 07

E. விடை தெரியவில்லை

167) மனிதரொருவர் புவியின் துருவத்திலிருந்து, நடுவரைக் கோட்டுப் பகுதியை நோக்கி வருகிறார். அவரின் மீது செயல்படும் மையவிலக்கு விசை

A. மாறாது B. அதிகரிக்கும் C. குறையும் D. முதலில் அதிகரித்து பின்பு குறையும்
E. விடை தெரியவில்லை

168) .................. என்பது சமூக நீதியின் பார்வையில் விவசாய உற்பத்தியை உயர்த்துவது (ம) உரிமையை மறுபகிர்வு செய்வதை உள்ளடக்கியது.

A. பஞ்சாயத்து ராஜ் அமைப்பு B. கிராமப்புற தொழில் C. நிலச்சீர்திருத்தம்
D. வறுமை ஒழிப்புத் திட்டம் E. விடை தெரியவில்லை

169) வேளாண் மகளிர் சக்தி மேம்பாட்டு பெருந்திட்டம் (MKSP) என்பதை செயல்படுத்தும் அமைச்சகம்

A. சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை B. நிதித்துறை C. தொழிற்துறை
D. ஊரக மேம்பாட்டுத் துறை E. விடை தெரியவில்லை

170) தாதாபாய் நௌரோஜி, இந்திய தேசிய காங்கிரசின் 3 ஆண்டு கூட்டங்களுக்கு தலைமை வகித்தார். அக்கூட்டங்கள் நடத்தப்பட்ட ஆண்டுகள்?

1. 1886 2. 1893 3. 1899 4. 1906

A. 1, 2, 3 B. 1, 2, 4 C. 1, 3, 4 D. 2, 3, 4 E. விடை தெரியவில்லை

171) கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

1. வளிமண்டல அழுத்தத்தை அளவிட உதவும் கருவி பாதரசமானி ஆகும்.
2. ஒரு பொருளின் இயக்கத்தை எதிர்க்கும் விசைக்கு உராய்வு என்று பெயர்.
3. அழுத்தத்தின் அலகு $Nm^{-1}$ ஆகும்.

A. 2, 3 B. 1, 2 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

172) 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்

A. முஸ்லீம் லீக் எழுச்சி.
B. காங்கிரஸ் (ம) முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு.
C. முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.
D. காங்கிரஸ் (ம) முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு.
E. விடை தெரியவில்லை

173) பொருத்துக.

a. சின்னச்சாமி - 1. என் கதை
b. கோபாலகிருஷ்ண பாரதி - 2. தேசியம் வளர்த்த தமிழ்
c. இராமலிங்கம் - 3. நந்தனார் சரித்திர கீர்த்தனைகள்
d. கா.திரவியம் - 4. சுதந்திரம் சும்மா கிடைக்கவில்லை

A. 4 3 1 2 B. 4 2 3 1 C. 2 3 1 4 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

174) “இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உழைப்பு” - இந்த திருக்குறளில் ‘இருபுனல்’ என்பது யாது?

A. ஆற்று நீர், கிணற்று நீர் B. ஆற்று நீர், கடல் நீர் C. மழை நீர், கிணற்று நீர்
D. கடல் நீர், மழை நீர் E. விடை தெரியவில்லை

175) பின்வருவனவற்றில் எது ‘தாய்’ திட்டத்துடன் தொடர்புடையது?

A. தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்.
B. முதலமைச்சரின் சூரியச்கதி கொண்ட பசுமை இல்லத் திட்டம்.

C. மகாத்மா காந்த தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்.

D. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்.

E. விடை தெரியவில்லை

176) கீழ்காணும் கல்வெட்டுகளில் தமிழக அரசர்களின் கூட்டணி பற்றி குறிப்பிடுவது எது?

A. உத்திரமேரூர் கல்வெட்டு B. ஹதிகும்பா கல்வெட்டு C. அசோகரின் கல்வெட்டு

D. திருமுக்கூடல் கல்வெட்டு E. விடை தெரியவில்லை

177) சம்படா (SAMPADA) திட்டம் எதனுடன் தொடர்புடையது?

A. வேளாண்மை நிதி B. சிறு விவசாயிகளுக்கான கடன்

C. வேளாண் உணவு சார்ந்த தொழிற்சாலை D. தொழிற்சாலைகளுக்கு கடன் வழங்குதல்

E. விடை தெரியவில்லை

178) பின்வருவனவற்றுள் எது விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கு வரும் நோய்?

A. தொழுநோய் B. தொண்டை அடைப்பான் C. ரேபிஸ் D. அமீபியாசிஸ்

E. விடை தெரியவில்லை

179) ஐஸ் கட்டியின் மீது நடப்பது சிரமமாக இருக்கும் ஏனெனில்

A. அழுத்தம் அதிகமாக இருக்கும் B. உராய்வு அதிகமாக இருக்கும்

C. அழுத்தம் குறைவாக இருக்கும் D. உராய்வு குறைவாக இருக்கும்

E. விடை தெரியவில்லை

180) 2005-ல் தொடங்கப்பட்ட, அணுகக்கூடிய, மலிவு, பொறுப்பு, பயனுள்ள மற்றும் நம்பகமான ஆரம்ப சுகாதார வசதிகளை குறிப்பாக மக்கள் தொகையில் ஏழை (ம) பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு வழங்குவதற்கான திட்டம்

A. தேசிய கிராமப்புற சுகாதாரப் பணி.

B. ஜனனி சுரக்ஷா யோஜனா.

C. தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

D. தேசிய குருட்டுத் தன்மையை கட்டுப்படுத்தும் திட்டம்.

E. விடை தெரியவில்லை

181) தெர்ரகோடா (ம) சைப்ரஸ் தீவில் எந்த பேரரசின் தூதுக்குழுவை பேரரசர் அகஸ்டஸ் சீசர் வரவேற்றார்?

A. சேரர் B. சோழர் C. பல்லவர் D. பாண்டியர் E. விடை தெரியவில்லை

182) மன உடன்பாடு இல்லாதவரோடு சேர்ந்து வாழும் வாழ்க்கை எதனோடு தங்கியிருந்து வருந்துவதற்கு ஒப்பாகும்?

A. பாம்பு B. புலி C. சிங்கம் D. யானை E. விடை தெரியவில்லை

183) “யாழுளே பிறப்பினும், யாழ்க்கு, அவைதாம் என் செய்யும்
சூழுங்கால், நும்மகள், நுமக்கும் ஆங்கு அனையனே!” - என்ற கலித்தொகைப் பாடல் உணர்த்தும் கருத்து என்ன?

A. இல்வாழ்க்கையில் இசையெனும் இன்பம் சேரும்.

B. இல்வாழ்க்கை தொடங்கும் போது பிறந்த இடத்துப் பாசம் விலகும்.

C. இல்வாழ்க்கையில் மக்கட்பேறு மகிழ்ச்சி கொடுக்கும்.

D. திருமண நிகழ்வில் இசை கருவிகள் பயன்பாடு இருக்கும்.

E. விடை தெரியவில்லை

184) தொலைக்காட்சி ஒளி பரப்பில் ஒலி சைகை .......... பண்பேற்றம் செய்யப்பட்டது.

A. மின் (electric) B. கட்டம் (phase) C. வீச்சு (Amplitude)

D. அதிர்வெண் (frequency) E. விடை தெரியவில்லை

185) குளிர் சாதனப் பெட்டி (ம) பனிக்கட்டி தொழிலகத்தில் செயல்படும் தத்துவமானது

A. வெப்ப இயக்கவியலின் முதல் விதி B. வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதி

C. வெப்ப இயக்கவியலின் மூன்றாம் விதி D. வெப்ப இயக்கவியலின் பூஜ்ய விதி

E. விடை தெரியவில்லை

186) கீழ்கண்ட கூற்றுகளின் அடிப்படையில் மிகச்சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. "காந்தளூர்ச் சாலை கலமறுத்த கோவிராச கேசரி" என்பது முதலாம் இராசராசனைக் குறிக்கும்.
2. "அயலகடல் நடுவில் பலகலம் செலுத்தி" என்பது முதலாம் இராசேந்திரன் மெய்கீர்த்தியில் காணப்படுகின்றது.

A. 1 (ம) 2 தவறு B. 1 (ம) 2 சரி C. 1 சரி, 2 தவறு D. 1 தவறு, 2 சரி

E. விடை தெரியவில்லை

187) 'ஒரே சமயம், ஒரே சாதி, ஒரே கடவுள்' என அறைகூவியது யார்?

A. சகாதரன் அய்யப்பன் B. கோபால் ஹரி தேஷ்முக் C. நாராயண குரு

D. வைகுண்ட சுவாமிகள் E. விடை தெரியவில்லை

188) அரேபியர்கள் சிந்து படையெடுப்பில் சரியான வாக்கியத்தை தேர்வு செய்க.

1. இந்தியாவின் செல்வங்களை கொள்ளையடிப்பது.
2. இந்தியாவின் மீது வணிக உறவை மேம்படுத்துவது.
3. தென்னிந்தியாவில் மட்டும் அதிகாரத்தை செலுத்துவது.
4. இந்தியாவில் அரேபியர்களின் படையெடுப்பில் கலாச்சார தாக்கம் நிரந்தரமற்றதாக இருந்தது

A. 1 (ம) 2 சரி B. 3 (ம) 4 சரி C. 2 (ம) 3 சரி D. 1 (ம) 4 சரி

E. விடை தெரியவில்லை

189) $V.D.$ சவார்க்கரால் ஆரம்பிக்கப்பட்ட ரகசிய சங்கம் என அழைக்கப்பட்டது எது?

A. இந்திய சங்கம் B. அபிநய பாரதம் C. பாரத சங்கம் D. யுவ பாரதம்

E. விடை தெரியவில்லை

190) இந்தியாவின் மீது படையெடுத்த முதல் இஸ்லாமியர் யார்?

A. கோரி முகம்மது B. முகம்மது-பின்-காசிம் C. முகம்மது-பின்-சூரி

D. கஜினி முகம்மது E. விடை தெரியவில்லை

191) பொது விநியோக முறையைப் பற்றி பின்வருவனவற்றில் எவை சரியானது?

1. இது நுகர்வோர் விவகாரங்கள் (ம) பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்திய உணவு பாதுகாப்பு அமைப்பு ஆகும்.
2. இது நாட்டின் உணவு (ம) ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவுகிறது.
3. இது கிடங்கில் இருப்பு (ம) உணவு தானியங்களை பராமரிக்கிறது.

A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 1 (ம) 3 D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

192) கீழ்க்கண்டவற்றில் எவை சரியாகப் பொருந்தவில்லை?

A. விதி 280 - நிதி ஆணையம்.

B. விதி 315 - மத்திய தேர்வாணையம்.

C. விதி 324 - தேர்தல் ஆணையம்.

D. விதி 323 - தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்.

E. விடை தெரியவில்லை

193) 'சுத்தமான குடிநீர் பெறுதல்' என்பது நமது அடிப்படை உரிமை. இது இந்திய அரசியலமைப்பில் எந்த பிரிவில் அடங்கியுள்ளது?

A. விதி 51(A) B. விதி 21 C. விதி 16 D. விதி 43 E. விடை தெரியவில்லை

194) பொருத்துக.

| நோய் | | சோதனை |
|---|---|---|
| a. குஷ்டநோய் | - | 1. கிளைகோசைலேட்டட் ஹீமோகுளோபின் சோதனை |
| b. டைபாய்டு | - | 2. லெப்ரோமின் சோதனை |
| c. காசநோய் | - | 3. வைடால் சோதனை |
| d. நீரழிவு நோய் | - | 4. மாண்டோக்ஸ் சோதனை |

A. 1 3 4 2 B. 2 3 4 1 C. 2 4 3 1 D. 3 2 1 4 E. விடை தெரியவில்லை

195) இந்தியாவின் மிக நீளமான உள்நாட்டு நீர்வழிப்பாதை

A. கர்நூல் - கடப்பா கால்வாய் B. தாமோதர் கால்வாய்

C. சாடியா - துப்பிரி கால்வாய் D. ஹால்டியா - அலகாபாத் கால்வாய்

E. விடை தெரியவில்லை

196) தாவர வளர்ச்சிக்குப் பயன்படும் நுண்சத்தை தேர்ந்தெடு.

A. ஆக்சிஜன் B. ஹைட்ரஜன் C. நைட்ரஜன் D. துத்தநாகம்

E. விடை தெரியவில்லை

197) கீழ்க்கண்டவற்றுள் தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது எது?

| ஹார்மோன் | | சுரக்கும் செல்கள் |
|---|---|---|
| 1. டெஸ்டோஸ்டிரோன் | - | இன்டர்சீசியஸ் செல்கள் |
| 2. புரோலாக்டின் | - | அட்ரினல் மெடுல்லா |
| 3. ஈஸ்ட்ரோஜன் | - | அண்டச் சுரப்பி |
| 4. புரோஜெஸ்ட்ரான் | - | கார்பஸ் லூட்டியம் |

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 2, 3 மட்டும் D. 4 மட்டும் E. விடை தெரியவில்லை

198) ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் விளையாட்டு என்ற தமிழரின் கலாச்சார (ம) பண்பாடு இந்திய அரசமைப்பின் ............... விதியின் படி பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

A. 29(1) B. 39(1) C. 49(1) D. 59(1) E. விடை தெரியவில்லை

199) கீழே கொடுக்கப்பட்டுள்ள நாளமில்லா சுரப்பிகளில் எது சரியாகப் பொருந்தும்.

1. லாங்கர்கான் திட்டுகள் - இன்சுலினை கொடுக்கும்.
2. தைராய்டு சுரப்பி - சர்க்கரை வியாதியை கொடுக்கும்.
3. அட்ரினல் சுரப்பி - முன் கழுத்து கழலையை கொடுக்கும்.

A. 1 மட்டும் B. 1 (ம) 2 C. 2 (ம) 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

200) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் என்பது?

1. விலைநிலத்தன்மை
2. பொருளாதார வளர்ச்சி
3. சமூக நீதி
4. அரசு வரவு-செலவு திட்டத்தின் பற்றாக்குறையை குறைப்பது

A. 1 மட்டும் B. 2 (ம) 3 C. 1, 2 (ம) 3 D. 4 மட்டும் E. விடை தெரியவில்லை

# Group II, IIA - 2024

## Test 8 - GS Revision I - Answer Key

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **D** | **B** | **D** | **B** | **C** | **D** | **D** | **C** | **C** | **B** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **C** | **A** | **A** | **A** | **C** | **B** | **C** | **A** | **D** | **A** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **D** | **B** | **C** | **B** | **D** | **C** | **C** | **A** | **A** | **C** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **D** | **C** | **B** | **B** | **B** | **C** | **C** | **B** | **A** | **B** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **A** | **C** | **B** | **B** | **B** | **C** | **B** | **A** | **C** | **A** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **B** | **B** | **C** | **D** | **C** | **C** | **A** | **D** | **A** | **B** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **C** | **C** | **C** | **D** | **D** | **B** | **A** | **B** | **C** | **C** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **B** | **B** | **C** | **D** | **C** | **C** | **B** | **D** | **D** | **B** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **C** | **B** | **A** | **C** | **D** | **A** | **D** | **C** | **A** | **B** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **D** | **A** | **B** | **B** | **A** | **D** | **A** | **C** | **D** | **A** |
| 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 | 109 | 110 |
| **C** | **B** | **B** | **C** | **A** | **B** | **A** | **A** | **C** | **D** |
| 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| **A** | **D** | **A** | **A** | **C** | **D** | **C** | **B** | **A** | **A** |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 |
| **B** | **A** | **C** | **B** | **A** | **A** | **A** | **C** | **D** | **A** |
| 131 | 132 | 133 | 134 | 135 | 136 | 137 | 138 | 139 | 140 |
| **A** | **C** | **C** | **A** | **D** | **D** | **B** | **C** | **D** | **C** |
| 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 |
| **C** | **B** | **D** | **A** | **C** | **B** | **C** | **C** | **D** | **A** |
| 151 | 152 | 153 | 154 | 155 | 156 | 157 | 158 | 159 | 160 |
| **A** | **B** | **A** | **B** | **C** | **C** | **D** | **D** | **B** | **B** |
| 161 | 162 | 163 | 164 | 165 | 166 | 167 | 168 | 169 | 170 |
| **B** | **B** | **A** | **A** | **C** | **B** | **A** | **C** | **D** | **B** |
| 171 | 172 | 173 | 174 | 175 | 176 | 177 | 178 | 179 | 180 |
| **B** | **C** | **A** | **C** | **A** | **B** | **C** | **C** | **D** | **A** |
| 181 | 182 | 183 | 184 | 185 | 186 | 187 | 188 | 189 | 190 |
| **D** | **A** | **B** | **D** | **B** | **B** | **C** | **A** | **B** | **B** |
| 191 | 192 | 193 | 194 | 195 | 196 | 197 | 198 | 199 | 200 |
| **D** | **D** | **B** | **B** | **D** | **D** | **B** | **A** | **A** | **C** |